செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அந்தக் குடியிருப்புகள், அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு, ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம் புதூர். அம்மையநாயக்கனூர் மற்றும் இடையபட்டி ஆகியவை. மற்ற கிராமங்களில் இருப்பவர்கள் இதுவரை என்ன செய்துகொண்டிருந்தார்களோ அதையே செய்ய வேண்டும். மேல் முறையீடு செய்தால் அது பற்றி பின்னால் கவனிக்கலாம்,

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, ஒரே பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள்தான் அத்தனையும். நாம் 'வாட்டர்' கொடுக்காமல் 'வாட்டர் செஸ்' என்று வசூல் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது நல்ல தண்ணீர் கொடுக்காமல் மற்ற கிராமங்களை ஒதுக்கிவைத்தால் அந்த மக்களுடைய வெறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா? அவர்களுடைய வெறுப்பை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறதா? ஆகையால் மறுபரிசீலனை செய்து அனைத்துக் கிராமங்களுக்கும் நல்ல தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நிலக் கோட்டையிலிருந்து தண்ணீர் வருகிறது. அந்த வழியில்தான் சிலுக்கார்பட்டி பஞ்சாயத்து இருக்கிறது. ஆகவே, அதையும் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே மக்கள் யாரும் இந்த அரசை கோபித்துக்கொள்ள மாட்டார்கள். காரணம் சுதந்திரம் அடைந்து இதுவரையில் அந்த இடம் இப்படியே இருக்கிறது. ஆகையால் புரட்சித் தலைவர் என்னமாவது செய்தால் போதும் என்று இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு 26.40 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அந்தக் காலத்தில் போடப்பட்டது. 'வே சைடு வில்லேஜஸ்' என்ற முறையில் அந்தத் திட்டத்தின் பைப் லைனை ஒட்டி இருக்கிற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்றால் 26.40 இலட்சத்திற்கு மேல் போகும். வேண்டுமென்றால் கீழ்க் குழாய் வைக்க வேண்டிய 'ஆகுமென்டேஷன் ஸ்கீம்' போடலாம். அதைப் பின்னால் பரிசீலிக்கலாம்.

சென்னையிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத்துணை இயக்குநர் அலுவலகம்.

வினா எண் 1089— திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தை (நகர் ஊரமைப்புத் துறை) காஞ்சீபுரத்திற்கு மாற்ற வேண்டுமென கோரிக்கை உள்ளதா?

1981 மே 13]

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) தற்போது சென்னையில் இயங்கிவரும் நகர் ஊரமைப்புத்துறை செங்கற்பட்டு மண்டல துணை இயக்குநர் அலுவலகத்தை அடுத்த கல்வியாண்டு துவங்குவதற்குமுன் காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநர் உடனே காஞ்சிபுரத்தில் தகுந்த கட்டிடம் தெரிந்தெடுத்து அலுவலகத்தை அரசு முடிவுப்படி காஞ்சிபுரத்திற்கு மாற்றும்படி கேட்கப்பட்டுள்ளார்.

தர்மபுரியில் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம்,

*வினா எண் 1084 திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் பெண்கள் அரசுக் கலைக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு, எஸ் அரங்கநாதன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் கல்லூரி இருக்கின்றது. ஆனால் தர்மபுரி மாவட்டத்திலே அந்த நிலை இல்லை. அந்த மக்கள் மட்டும் ஏன் அதைப் பெற முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே அருமை அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் அதைச் செய்வதற்கு வழிவகை செய்து தருவார்களா? இதற்கு முன் இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பூர்ணலிங்கம் அவர்களும் அது பற்றி அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். திரு. அசோக்குமார் அவர்களும் அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அண்ணன் கல்வி அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லை என்று தெரிவித்துவிட்டார்கள். ஆகவே இதற்கு ஆவன செய்வார்களா?

மாணபுமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, புதிதாகக் கலைக் கல்லூரிகளைத் துவங்குவது இல்லை என்ற ஒரு முடிவிலே அரசு இருக்கின்றது. அதுபற்றி பரிசீலிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. அப்படிப் புதிதாக கலைக் கல்லூரி ஆரம்பிக்கின்ற நிலைமை வருகின்றபோது அந்தந்தப் பகுதிகளை அனுசரித்து, பொதுமக்களின் ஆர்வத்தையும் அடிப்படையாக வைத்து புதிய கல்லூரிகளைத் துவங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.